**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.87/2022 தேதி- 24.02.2026
(P.W.2) –ஆண்ட்ரூஸ்

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய பிறந்த நாள் என்ன என்றால் 10.06.1963 ஆகும். தற்போது என்ன வயதாகிறது என்றால் 63 வயதாகும். இவ்வழக்கின் வாதியை தெரியுமா என்றால் தெரியும். வாதிக்கு தற்போது எத்தனை வயது இருக்கும் என்றால் 60 வயதிருக்கும். நானும், இவ்வழக்கின் வாதியும் சிறு வயதில் இருந்தே நண்பர்கள் என்றால் என்னுடைய உறவினர் ஆவார்.

2. வாதி வழக்கின் சொத்தை எப்போது விலைக்கு வாங்கினார் என்றால் 1994 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கினார். வாதி விலைக்கு வாங்கிய சொத்தில் வீடு எதுவும் உள்ளதா என்றால் வீடு உள்ளது. அந்த வீட்டில் தான் வழக்கின் வாதி 30 ஆண்டுகளாக வசித்து வருகிறார். நானும், வாதியும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றாலும், ஒரே தேவலாயத்தில் சென்று வருவோம் என்றால் சரிதான்.

3. வழக்கு பட்டிகை சொத்தை வாதிக்கு எழுதிக் கொடுக்கலாம் என்று வாதியினுடைய தந்தை சொல்லியிருந்தார் என்றாலும், ஆனால் இறக்கும் வரை ஆவணம் எதுவும் வாதியின் பெயரில் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதியுனுடைய தந்தை 1994 ஆம் ஆண்டு வழக்கு பட்டிகை சொத்தை கிரயம் வாங்கும் போது பிரதிவாதிகள் 2 மற்றும் 3 நபர்களின் கணவர்கள் பெயரில் கிரயம் வாங்கிக் கொடுத்ததாக சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதை காட்டுவதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் மூன்று பேருக்கும் ஒரே நாளில் கிரயம் வாங்கிக் கொடுத்தார், ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. மேற்சொன்னவாறு ஆவணங்கள் ஏதும் இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளின் கணவர் பேரில் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் அவர்களின் சுய உழைப்பில் வாங்கப்பட்ட சொத்துக்களாகும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2 மற்றும் 3 வது

பிரதிவாதிகளின் கணவர் வாங்கிய சொத்தில் வீடு அமைத்து அதில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5. வாதியின் தந்தை இறந்த பிறகு வாதியின் தாயாரும், அவர் குடும்பத்தினரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை, வாதியும், அவருடைய அம்மா மட்டும் தான் அனுபவித்து வந்தார்கள். 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் வாதியின் தாயாரை பார்க்க வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டிற்கு சென்று வருவார்கள் என்றால் சரிதான். வாதியின் தந்தை இறந்த பிறகு வாதியின் தாயார் வழக்கு பட்டிகை பொறுத்து ஒரு ஆவணம் 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்தார் என்றால் கேள்விப்பட்டுள்ளேன்.

6. இவ்வழக்கின் வாதி வசதிபடைத்தவர் என்றால் இல்லை. வாதியினுடைய நெருங்கிய நண்பர் என்றாலும், உறவினர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.